සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

| 14 | T | I, II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்கத் திருமறை I, II
Catholicism I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கத்தோலிக்கத் திருமறை I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** திருவிவிலியத்தைப் பிரிக்கக்கூடிய பகுதிகளின் எண்ணிக்கை
(1) 2 ஆகும். (2) 3 ஆகும். (3) 4 ஆகும். (4) 5 ஆகும்.

**2.** போலி ஆசிரியர்களின் தவறான கற்பித்தலை சீர் செய்வதை நோக்கமாகக் கொண்டு திருமுகம் ஒன்று யாருக்கு எழுதப்பட்டது?
(1) கலாத்தியருக்கு (2) கொரிந்தியருக்கு
(3) தெசலோனிக்கேயருக்கு (4) கொலோசையருக்கு

**3.** புதிய ஏற்பாட்டிற்குரிய திருமுகங்களின் எண்ணிக்கை
(1) 20 ஆகும். (2) 21 ஆகும். (3) 23 ஆகும். (4) 24 ஆகும்.

**4.** தொமீசியன் என்னும் உரோமைப் பேரரசனின் கீழ் கொடிய கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்களைத் திடப்படுத்தவும், நம்பிக்கையில் உறுதிப்படுத்தவும் எழுதப்பட்ட நூல்
(1) நீதி மொழிகள் ஆகும். (2) சபை உரையாளர் ஆகும்.
(3) திருவெளிப்பாடு ஆகும். (4) சீராக்கின் ஞானம் ஆகும்.

**5.** நன்மை தீமையைப் பகுத்தறிந்து, நன்மையைத் தமது வாழ்வில் கடைப்பிடித்து கடவுளுக்கு உகந்த நேரிய வாழ்க்கை வாழ்வது
(1) ஞானம் ஆகும். (2) புத்தி ஆகும். (3) அறிவு ஆகும். (4) தேவபயம் ஆகும்.

**6.** "இது முதல் மானிடமகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார்." என இயேசு வெளிப்படுத்தியது யார் முன்னிலையிலாகும்?
(1) ஏரோது அந்திபாஸின் (2) உரோமைப் பேரரசனின்
(3) ஆளுனன் பிலாத்துவின் (4) யூதர்களின் மூப்பர் சங்கத்தின்

**7.** "மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும்." இயேசு இவ்வாறு கூறியது
(1) புனித யோவானுக்கு ஆகும். (2) புனித பவுலுக்காகும்.
(3) புனித பேதுருவுக்காகும். (4) புனித யாக்கோபுவிற்கு ஆகும்.

**8.** திருச்சபையின் ஏகம் என்பதன் மூலம் கருதப்படுவது
(1) அப்போஸ்தலிக்கமாகும். (2) பரிசுத்தமாகும்.
(3) கத்தோலிக்கமாகும். (4) ஒருமைத்துவமாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

**9.** இயேசு நித்திய வாழ்வு தரும் உணவாகிய தேவநற்கருணையை நிறுவியது
(1) பெரிய வியாழனன்று ஆகும். (2) பெரிய வெள்ளியன்று ஆகும்.
(3) அல்லேலூயா சனியன்று ஆகும். (4) பாஸ்கா ஞாயிறன்று ஆகும்.

**10.** பழைய ஏற்பாட்டின் வழிபாடுகளில் பிரதான செயற்பாடு
(1) சினகொக் செல்லுதல் ஆகும். (2) அயலாருக்கு அன்பு செலுத்துவது ஆகும்.
(3) பலி செலுத்துவதாகும். (4) எருசலேம் தேவாலயத்தைக் கட்டுவதாகும்.

**11.** புனித மக்ஸிமிலியன் கோல்பே அடிகளாருக்கு தேவ அன்னை காட்சிகொடுத்தபோது அன்னையின் கையில் இருந்தவை யாவை?
(1) திருச்சிலுவையும் செபமாலையும்
(2) வெள்ளை நிற றோஜா முடியும் திருச்சிலுவையும்
(3) சிவப்பு நிற றோஜா முடியும் திருச்சிலுவையும்
(4) வெள்ளை நிற றோஜா முடியும் சிவப்பு நிற றோஜா முடியும்

**12.** "என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது." இவ்வெளிப்பாடு பத்துக்கட்டளைகளில் எத்தனையாவது கட்டளையுடன் தொடர்புடையதாகும்?
(1) முதலாம் கட்டளையுடன் (2) இரண்டாம் கட்டளையுடன்
(3) மூன்றாம் கட்டளையுடன் (4) நான்காம் கட்டளையுடன்

**13.** குலமுதுவர் யாக்கோபுவின் மகன் யோசேப்புவைக் குற்றத்திற்கு உட்படுத்திக்கொள்ள முயற்சித்தவர் யாருடைய மனைவியாகும்?
(1) இஸ்மாயேலின் (2) போத்திபாரின் (3) ஏசேயின் (4) றூபனின்

**14.** தாம் கல்வி கற்கும் பாடசாலையின் சட்ட ஒழுங்குகளை அவமதித்தல் ஓர் எதிரான செயலாக அமைவது
(1) மூன்றாவது கட்டளைக்காகும். (2) நான்காவது கட்டளைக்காகும்.
(3) ஐந்தாவது கட்டளைக்காகும். (4) ஆறாவது கட்டளைக்காகும்.

**15.** ஏழாம் கட்டளைக்கு எதிராகச் செய்யும் ஓர் செயல்
(1) தற்கொலை ஆகும். (2) வாக்குறுதியை மீறுதல் ஆகும்.
(3) பிறர் குற்றத்தை பிரசித்தப்படுத்துதல் ஆகும். (4) பிறர் உடமைகளை அபகரித்தல் ஆகும்.

**16.** "தூய ஆவியாரைச் சோதிக்க நீங்கள் உடன்பட்டதேன்? இதோ உன் கணவனை அடக்கம் செய்தவர்கள் கதவருகில் வந்துவிட்டார்கள்." இவ்வாறு புனித பேதுருவானவர் கூறியது
(1) சப்பிராளுக்காகும். (2) மார்த்தாவிற்காகும்.
(3) பிறிஸ்கிலாவிற்காகும். (4) லிதியாவிற்காகும்.

**17.** திருவழிபாட்டு ஆண்டில் தை மாதத்தில் நிறைவேற்றப்படும் ஒரு திருவிழா
(1) புனித சூசையப்பரின் திருவிழாவாகும்.
(2) நற்செய்தியாளர் புனித மாற்குவின் திருவிழாவாகும்.
(3) இயேசு உருமாற்றம் பெற்ற திருவிழாவாகும்.
(4) ஆண்டவரின் திருக்காட்சித் திருவிழாவாகும்.

**18.** திருப்பலியில் ஆசிநீர் தெளித்தல்
(1) நற்கருணை வழிபாடாகும்.
(2) மனத்துயர் வழிபாடாகும்.
(3) இறைவார்த்தை வழிபாட்டிற்கு ஆயத்தமாகும்.
(4) பீடத்தை ஆயத்தம் செய்யும் சடங்காகும்.

**19.** வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
"புனித யோவான் நற்செய்தியின்படி, ஒரே கடவுளாகிய தந்தையையும் அவர் அனுப்பிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிவதே ............................" ஆகும்.
(1) இறை நம்பிக்கை (2) அன்பின் சிறப்பு
(3) நிலை வாழ்வு (4) உறுதிப்பூசுதல்

**20.** இயேசு பூங்காவனத்தில் (கெத்சமனி தோட்டத்தில்) தமது சீடர்களுக்கு எத்தனை முறை செபிக்கும்படி அறிவுரை வழங்கினார்?
(1) இரண்டு முறை (2) மூன்று முறை (3) நான்கு முறை (4) ஐந்து முறை

[பக். 3 ஐப் பார்க்க

**21.** ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களும், ஏற்றுக்கொள்ளப்பட்ட இணைத்திருமுறை நூல்களும் வேறுபடுத்திக் காட்டப்படாதிருப்பது
(1) இலத்தின் பிரதியிலாகும். (2) கிரேக்க பிரதியிலாகும்.
(3) மசரோட்டிக் பிரதியிலாகும். (4) எபிரேய பிரதியிலாகும்.

**22.** எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பெயர்கள் மட்டும் உள்ளடங்கும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) எலிசா, அஹியா, மீக்கா, யோனா (2) நாத்தான், எலியா, மீக்கா, யோபு
(3) எலியா, குல்தா, மீக்காயா, அஹியா (4) குல்தா, மீக்காயா, யோபு, நாத்தான்

**23.** "நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம் வாடியிருப்பது ஏன்?" இவ்வாறு யாரால்? யாருக்குக் கூறப்பட்டது?
(1) ஆண்டவரால் காயினுக்கு (2) ஆண்டவரால் ஆதாமுக்கு
(3) திருமுழுக்குயோவானால் ஏரோதுக்கு (4) இயேசுவால் பரிசேயனுக்கு

**24.** வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
ஆபிரகாமின் பரம்பரை எகிப்தில் வளர்ச்சியடைந்தது .............................. அனுமதியுடனாகும்.
(1) பார்வோன் அரசனின் (2) இஸ்ரயேலரின்
(3) யோசேப்பின் (4) எகிப்திய அரசர்களின்

**25.** பெரும் துன்பங்கள் 4, 6, 8 வரிசைப்படி சரியாகக் காணப்படும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) தவளைகள் பெருக்கம், ஈக்களின் பெருக்கம், வெட்டுக்கிளிகள் பரவுதல்
(2) கொசுக்களின் தொல்லை, ஈக்களின் பெருக்கம், கொப்புளங்கள் தோன்றுதல்
(3) ஈக்களின் பெருக்கம், கொப்புளங்கள் தோன்றுதல், வெட்டுக்கிளிகள் பரவுதல்
(4) ஈக்களின் பெருக்கம், கல்மழை, வெட்டுக்கிளிகள் பரவுதல்

**26.** "நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை இதுவே உங்கள் ஒவ்வொரு ஆணும் விருத்த சேதனம் செய்துகொள்ள வேண்டும்." இவ்வாறு குறிப்பிடப்படுவது
(1) தொடக்க நூலிலாகும். (2) விடுதலைப் பயண நூலிலாகும்.
(3) எண்ணிக்கை நூலிலாகும். (4) இணைச்சட்ட நூலிலாகும்.

**27.** இறைவன் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை முன்வைத்துள்ள மரபுகள் இரண்டும் ஆவன,
(1) யாவே மரபு, எலோகிம் மரபு ஆகும்.
(2) இணைச்சட்டம் மரபு, குருக்கள் மரபு ஆகும்.
(3) யாவே மரபு, குருக்கள் மரபு ஆகும்.
(4) யாவே மரபு, இணைச்சட்டம் மரபு ஆகும்.

**28.** புதிய சமூகக் கோட்பாட்டில் நீதியும், சமத்துவமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், அன்பும், இரக்கமும் அடங்கியுள்ளது என முன்வைத்தவர்
(1) மோசே ஆவார். (2) கிறிஸ்துநாதராவார்.
(3) திருமுழுக்கு யோவானாவார். (4) ஆபிரகாம் ஆவார்.

**29.** "மகளே, துணிவோடு இரு. உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று." இயேசு இவ்வாறு யாருக்குக் கூறினார்?
(1) மரிய மதலேனாவிற்கு
(2) சமாரியப் பெண்ணுக்கு
(3) தலைமைக்குருவின் மகளுக்கு
(4) இரத்தப்போக்குடைய பெண்ணுக்கு (இயேசுவின் ஆடையை தொட்ட பெண்ணுக்கு)

**30.** பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துக.
A - திருமுழுக்கில் பிரதான மற்றும் கட்டாய அடையாளமாகும்
B - உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாகும்
C - கிறிஸ்தவனாகத் திடப்படுத்துகிறது
D - புனிதத்துவத்தின் அடையாளமாகும்

மேற்கூறிய ஒவ்வொரு விடயத்தின் மூலமும் வெளிப்படுத்தப்படுவது திருமுழுக்கின்போது பயன்படுத்தப்படும் பொருட்களின் கருத்தாகும். அப்பொருட்கள் வரிசைப்படி குறிப்பிடப்பட்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) கிறிஸ்மா தைலம், பாஸ்காத்திரி, தண்ணீர், வெண்ணிற ஆடை
(2) பாஸ்காதிரி, கிறிஸ்மா தைலம், வெண்ணிற ஆடை, தண்ணீர்
(3) கிறிஸ்மா தைலம், தண்ணீர், பாஸ்காதிரி, வெண்ணிற ஆடை
(4) தண்ணீர், பாஸ்காதிரி, கிறிஸ்மா தைலம், வெண்ணிற ஆடை

[பக். 4 ஐப் பார்க்க

**31.** வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
குருத்துவத்தின் முழு நிறைவு ................. நிலையாகும்.
(1) ஆயர் (2) ஏகாந்தி (3) திருத்தொண்டர் (4) துறவற

**32.** திருமணமாகாது தமது முழு வாழ்க்கையையும் இறை அரசுக்காக அர்ப்பணித்தலைக் குறிப்பது
(1) பணி வாழ்வு என்றாகும். (2) குருத்துவ மணத்துறவு என்றாகும்.
(3) குழுவாழ்வு என்றாகும். (4) தன்னலமற்ற வாழ்வு என்றாகும்.

**33.** துறவற வாழ்வுக்கான ஒழுங்கு விதிமுறைகளை எழுதியவர்களாகவும், துறவற வாழ்வை முறைப்படுத்த உழைத்தவர்களுமாகக் கணிக்கப்படுபவர்கள்
(1) புனித யோவான் மற்றும் புனித அகுஸ்தினார் ஆவார்.
(2) புனித ஆசீர்வாதப்பர் மற்றும் புனித பசில் ஆவார்.
(3) புனித ஜெரோம் மற்றும் புனித யோவான் ஆவார்.
(4) புனித ஆசிர்வாதப்பர் மற்றும் புனித பக்கோமியோ ஆவார்.

**34.** கிறிஸ்தவனுக்குப் பொதுக் குருத்துவத்தின் மூலம் இறைவாக்குப் பணியில் ஈடுபட உதவியாக இருப்பது
(1) மரியாயின் சேனை ஆகும். (2) மறைப்பாடசாலை ஆகும்.
(3) இயேசுவின் திரு இருதய சபை ஆகும். (4) இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் ஆகும்.

**35.** திரு. பிராங்டப் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட பொது நிலையினர் அப்போஸ்தலிக்க பணி
(1) இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கமாகும்.
(2) இயேசுவின் திரு இருதய சபையாகும்.
(3) மரியாயின் சேனையாகும்.
(4) தூய வின்சன் டி போல் சபையாகும்.

**36.** இறை - மனித உரையாடலுக்காக இயேசு நமக்களித்த முழுமையான எடுத்துக்காட்டு
(1) பாலை நிலத்துச் செபமாகும். (2) பூங்காவனத்தில் செபமாகும்.
(3) உன்னத குருவின் செபமாகும். (4) இயேசு கற்பித்த செபமாகும்.

**37.** கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வியின் படி நமது ஆராதனை உரிமையாவது
(1) தந்தையாகிய இறைவனுக்கு, சுதனாகிய இறைவனுக்கு, மரியன்னைக்கு மட்டுமே.
(2) தந்தையாகிய இறைவனுக்கு, சுதனாகிய இறைவனுக்கு, தூய ஆவியானவருக்கு மட்டுமே.
(3) தந்தையாகிய இறைவனுக்கு, மரியன்னைக்கு, தூய ஆவியானவருக்கு மட்டுமே.
(4) சுதனாகிய இறைவனுக்கு, மரியன்னைக்கு, தூய ஆவியானவருக்கு மட்டுமே.

**38.** கி. பி. 1917 இல் பாத்திமா நகரில் மரிய அன்னை காட்சி கொடுத்தது யாருக்கு?
(1) பிரான்சிஸ், ஜசிந்தா மற்றும் லுசியா
(2) பிரான்சிஸ், பெர்ணதேத் மற்றும் ஜசிந்தா
(3) ஜசிந்தா, லுசியா மற்றும் கொறட்டி
(4) லுசியா, பெலிசிட்டா மற்றும் ஜசிந்தா

**39.** இடையறாது ஒவ்வொரு வேளையும் இறைவனைப் புகழுவது
(1) எங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகும்.
(2) அதில் தாவீது மன்னனின் திருப்பாடல்கள் இருப்பதனாலாகும்.
(3) எல்லாக் காலமும் இறைவனுக்கு உரியது என்பதனாலாகும்.
(4) பழைய இஸ்ரயேலரின் பழக்கமாக இருந்துவந்துள்ளதாலாகும்.

**40.** கத்தோலிக்கராகிய நமது தியானத்திற்கு அடித்தளமாக இருப்பது
(1) இறைவார்த்தை அடங்கியுள்ள திருவிவிலியமாகும்.
(2) பெரிய குறிப்பிடமாகும்.
(3) சிறிய குறிப்பிடமாகும்.
(4) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூலாகும்.

* *

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்கத் திருமறை I, II
Catholicism I, II

## கத்தோலிக்கத் திருமறை II

* ✳ **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* ✳ முதலாம் வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவுக்கும் **10** புள்ளிகள் வீதமும் உரித்தாகும்.

**1.** (i) புனித பவுல் மூலம் அனுப்பப்பட்ட திருமுகங்கள் வழியாக நிறைவேற்றப்பட்ட பணிகள் **இரண்டினை** எழுதுக.

(ii) புனித யோசேப் வாஸ் அடிகளாரின் பெற்றோரின் பெயர்களை எழுதுக.

(iii) நான்காம் கட்டளையின்படி அன்புடன் வாழ்க்கை நடாத்த குடும்பத்திற்கு வெளியே மற்றவர்களுக்காகச் செய்யக்கூடிய **இரு** செயல்களை எழுதுக.

(iv) உமது வாழ்வை இறைவனுக்கு உகந்த காணிக்கையாக அமைத்துக் கொள்ளுவது எவ்வாறு என்பதை எடுத்துக் காட்ட **இரு** உதாரணங்கள் தருக.

(v) ஒழுக்க வாழ்வு தொடர்பான **இரு** கட்டளைகளையும் எழுதுக.

(vi) திருவிவிலியத்தில் காணப்படும் உடன்படிக்கைகள் பொதுவாகச் சமுதாயத்தில் காணப்படும் உடன்படிக்கைகளை விட முற்றிலும் வேறுபட்டதாகும். அவ்வேறுபாடுகள் **இரண்டினை** எழுதுக.

(vii) திருமுழுக்கு யோவான் படைவீரர்களுக்குக் கூறிய அறிவுரைகள் **இரண்டு** எழுதுக.

(viii) "கடவுளைக் காண்பர்", "கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்" என்னும் பேறுகள் உள்ளடங்கும் வசனங்கள் **இரண்டினையும்** முழுமையாக எழுதுக.

(ix) திருமணத்தின்போது செய்யும் திருமண வாக்குறுதியில் அடங்கியுள்ள வாக்குறுதிகள் **இரண்டு** எழுதுக.

(x) மரியாளுக்குரிய திருவிழாக்களில் கடன் திருநாட்கள் **இரண்டினை** எழுதுக.

**2.** (i) இயேசுவின் விண்ணேற்பின் பின்பு தூய ஆவியின் வருகையை எதிர்நோக்கி இருந்த மரியாள் உட்பட சீடர்கள் குழு தூய ஆவியின் வருகை நாளில் அனுபவத்தில் கண்ட நிகழ்வுகள் **இரண்டினை** எழுதுக.

(ii) தொடக்கத் திருச்சபையில் திருத்தொண்டர்களை நியமிக்கும் போது அவர்களில் அவதானிக்கப்பட்ட பண்புகள் **மூன்றினையும்** எழுதுக.

(iii) உமது வாழ்வில் தூய ஆவியின் கொடைகளை அனுபவித்த சந்தர்ப்பங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக.

**3.** (i) மறைத்தூதுரைப் பயணத்தின் போது புனித பவுல் முகம்கொடுத்த தடைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) புனித பவுலின் இரண்டாவது தூதுரைப் பயணத்தில் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அவருடன் இணைந்து கொண்ட **மூவரினதும்** பெயர் தருக.

(iii) ஒரு மாணவனாக உமது பாடசாலையில் இறைவனுக்காக உம்மால் செய்யக்கூடிய செயல்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

4. (i) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வியின்படி எமது வாழ்க்கை மட்டில் எமக்குள்ள பொறுப்புக்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) இறைவன், மனிதனால் ஆளப்பட, அவனுக்குக் கீழ் உருவாக்கிய விலங்கினங்கள் **மூன்றின்** பெயர் தருக.

(iii) மற்றவர்களின் வாழ்க்கையைப் பாதுகாக்க நீர் எவ்வாறு செயற்படுவீர் என **ஐந்து** காரணிகள் மூலம் விவரிக்குக.

5. (i) ஐந்நூலில் குருக்கள் மரபைச் சேர்ந்த **இரு** நிகழ்வுகளை எழுதுக.

(ii) ஐந்நூலின் முக்கியத்துவத்தை **மூன்று** விடயங்களில் முன்வைக்குக.

(iii) இறைவார்த்தையை உமது வாழ்க்கைக்கு ஒளியாக்கிக் கொள்வது எவ்வாறு என **ஐந்து** காரணிகளின் கீழ் விளக்குக.

6. (i) திருமுழுக்கின் போது கிறிஸ்மா (Chrism) தைலம் பூசுதல் மூலம் ஓர் கிறிஸ்தவனாகத் திடப்படுத்தப்படுவது எதற்காக என **இரு** விடயங்கள் எழுதுக.

(ii) திருமுழுக்கின் மூலம் கிட்டும் இறையருள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) திருமுழுக்கின் மூலம் நீர் பெற்ற மூவித பணிகளையும் எவ்விதம் செயற்படுத்துவீர் என **ஐந்து** விடயங்களில் விளக்குக.

7. பின்வரும் தலைப்புக்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து சிறுகுறிப்பு எழுதுக.

(i) தூய நற்கருணையின் சிறப்பியல்பான 'நினைவு கூருதல்'

(ii) அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளார்

(iii) இஸ்ராயேல் இறைவாக்கினர்

(iv) கத்தோலிக்கர் நமது மறைப் பாடசாலை

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

www.LOL.LK

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න



කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**